<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

இடைக்கால மனு எண். 26/2018

நிறைவேற்று மனு எண். 27/2017

ம.சா. 2 – வெள்ளியங்கிரி

<u>25–08–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) சா.சா.ஆ.1 யைத்தவிர ஆர்.ஆர்.பில்டர்ஸ் எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. சா.சா.ஆ.1ன் படி வேலை செய்வதற்காக ஒப்பந்தம் ஏதும் ஏற்பட்டதா என்றால் இல்லை வெகு நாட்கள் ஆகிவிட்டது. முதல் விசாரணையில் மனுச் சொத்தில் எந்த வருடம் வேலை ஆரம்பித்து எந்த வருடம் வேலையை முடிக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரி. மனுச் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது.

2) முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு நான் எந்த கட்டிடமும் கட்டவில்லை சா.சா.ஆ.1 மனுவிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் தவறு.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.